Registered No. M. 442.

सत्यमेवजयति
THE MESSENGER OF TRUTH

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
4 -JUN 1913
MADRAS.

# சத்திய தூதன்.

JUNE, 1913. | PRICE, 1 PIE.—விலை, க பை. | ஜூன்மீ, 1913.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**ஸ்திரீ மூளை.** — ஸ்திரீயின் மூளை புருஷன் மூளையைவிடத் தீவிரகதியாய் முதிர்ச்சியடைகிற தென்றும், நெடுங்காலம் சத்துவங் குன்றாதிருக்கிற தென்றும் ரூபிக்கப்பட்டிருக்கிறது.

**ஒரு நூதன துப்பாக்கி.** — ஒரு ஜெர்மன்காரன் நூதனமான துப்பாக்கியொன்று செய்திருக்கிறான். அதை யொருவன்மேல் பிரயோகித்தால் அவனைக் கொல்லாமல் புகையினால் அவனை மயக்கிக் கீழே தள்ளிவிடுகிறது. திருடர்களையும் குற்றவாளிகளையும் கொல்லாமற் பிடிக்கப் போலீஸாருக் கேற்ற ஒரு நல்ல ஆயுதமா யிருக்குமென்னத் தடையில்லை.

**இராக்ஷத பீரங்கி.**—அமெரிக்காவில் பெரிய பீரங்கியொன்று செய்யப்பட்டிருக்கிறது. இதன் வாயகலம் 14 அங்குலம். நிறை 50 டன். செலவு 22 ஆயிரம் பவுண். ஒரு வெடிக்குச் செலவு 150 பவுண். $5\frac{1}{2}$ அடி நீளமும் 1660 பவுண் நிறையுமுள்ள இருப்பாயுதத்தை 6 மைல்தூரம் எறியக் கூடியது. இவ்வளவுதூரம் குண்டு செலுத்தக் கூடிய பீரங்கி இதுமட்டுஞ் செய்யப்பட்டதில்லை.

**நமது அரசரும் பைபிலும்.**—32 வருஷங்களுக்கு முன்னர் நமது மாட்சிமைதங்கிய 5-ம் ஜார்ஜ் அரசர், தினந்தோறும் சத்தியவேதப் புஸ்தகத்தில் ஒரு அதிகாரம் வாசிப்பதாகத் தமது அன்னையாருக்கு வாக்களித்தார். அந்தப்பிரகாரமே அவர் நாடோறுஞ் செய்து 8 முறை சத்தியவேதப் புஸ்தகத்தை முடித்து 9-ம் முறை இப்போது வாசிக்க ஆரம்பித்திருக்கிறார். இவரைப்போல எத்தனை பேர் செய்யக்கூடும்?

**உள்நோய் காட்டுங் கருவி.**—பெர்லின் ஆயுள்வேதப் பண்டிதர் ராசன்தாட் என்பவர் மனிதருடைய தேகத்துக்குள் ளிருக்கும் உறுப்புகளிலுள்ள வியாதியைக் காண்பிக்குங் கருவி யொன்றைச் செய்திருக்கிறார். வியாதியின் கூறறியாது செய்வதினாலுண்டாகும் பல கஷ்டங்களும், பெரும்பாலும் உள்ளுறுப்பைச் சரிப்படுத்த நிறைவேறும் சத்திர சிகிச்சையும் இனிக் குறைவுபடுமென்பதற்குச் சந்தேகமில்லை.

**உலகிற் சமாதான செலவு.**—உலக முழுமையிலும் சமாதானத்தை நிலைநிறுத்தவும், சமாதானக் கேடுண்டாயின் யுத்தத்துக் காயத்தமாயிருக்கவும் ஐரோப்பிய ஜாதியார் வருஷவாரி செலவிடும் பணத்தொகை 350,000,000 பவுண். இத்தொகை எவ்வளவு பெரிதென்றால், ஒரு ரெயில்வண்டித் தொடரில் இதை எற்றினால் வண்டியொன்றுக்கு 10 டன் நாணயங்கள் எற்றின வண்டித்தொடர் ஒருமைல் நீள மிருக்குமென் றறிக.

**குழந்தைகளைத் தபாலில் அனுப்பல்.**—எல்லா ஆச்சரியங்களும் பிறக்கிற ஆச்சரிய கண்டமாகிய அமெரிக்காவிலிருந்து குழந்தைகளையுந் தபாலிலனுப்புகிற இந்த ஆச்சரிய செய்தி வருகிறது. அமெரிக்க ஐக்கியமாகாணத்தில் குழந்தைகளைப் பெற்றோர் தூரத்திலிருக்கும் பாட்டன் பாட்டிமார் பார்க்க ஆசித்தால் பிள்ளையொன்றை 10 பவுணுக்கு இன்ஷியூர் செய்து தபாலி லனுப்பிவருகிறார்கள். இதற்குத் தபால் கட்டணம் $7\frac{1}{2}$ பென்ஸ்.

**லண்டனில் நிலத்தின் கிரயம்.**—சென்னையில் நிலத்தின் கிரயம் எறிக்கொண்டு வருவதைக் குறித்து ஆச்சரியப்படவேண்டியதில்லை. லண்டன் நகரில் அச்சுறுத்தும்விதமாய் அது உயர்ந்து வருகிறது. சேரிங்கிராஸில் ஒரு துண்டு நிலம் 14 லக்ஷம் பவுணுக்கு விலைபோயிற்று. இதன்படி ஒரு சதுர அடியின் கிரயம் 32 பவுணாகிறது. லண்டன் நடுப்பட்டணத்தில் ஒரு எக்கர் 20 லக்ஷம் பவுண் விற்கிறதென்றால், அப்பட்டணத்து மண்ணும் பொன்னேயென் றெண்ணவேண்டியதாகிறது.

**அதிபூர்வ மனிதன்.** -- பாரீஸில் நெவிலி என்னுமிடத்தில் நப்போலியன் என்கிற சக்கரவர்த்தியால் குழந்தையாகத் தூக்கப்பட்ட பூர்வகாலத்து மனித னொருவனிருக்கிறான். இவன் இரண்டு பிரஞ்சு சக்கரவர்த்திகளையும் மூன்று அரசர்களையும், பத்துப் பிரஜாதிபதிகளையுங் கண்டவன். இவன்காலத்தில் இருமுறை இராஜாங்க மாறுதலும் ஒரு குடிஜனக்கலகமும் நேர்ந்தது. "மனிதர்க்கு வயது நூறல்லதில்லை" யென்பது இவன்விஷயத்தில் பொய்த்ததென்றே கூறல் வேண்டும்.

**உலகில் நீளமான பாலம்.** — உலகின்கண்ணுள்ள பாலங்களெல்லாவற்றினும் பெரிதெனச் சொல்லக்கூடிய பாலமொன்று இப்போது நியூயார்க் நகரிற் கட்டப்பட்டுவருகிறது. இதன் நீளம் 15,840 அடி. தற்காலத்திற் பெரிதென்னக் கூடியது டேபிரிட்ஜ் என்கிற பாலம். இதன் நீளம் 10,780 அடிமாத்திரம். புதிதாகக் கட்டப்படுகிற ஹெல்கேட் பாலம் என்னப்படும் நியூயார்க் பாலத்துக்குச் செல்லும் செலவு 12 லக்ஷம் பவுண் என்றும், இது கட்டி முடிய 4 வருஷஞ் செல்லுமென்றுங் கூறப்படுகிறது.


**தற்கால வாலிபர்கள்.**—பிரஞ்சுப் பத்திரிகை யொன்று தற்காலத்து வாலிபர்களுக்குள் காணப்படும் நிஷித்தமான குணங்களில் எழு குணங்களை யெண்பிக்கும்படி அப்பத்திரிகையை வாசிக்கும் பெண்பாலரைக் கேட்க, பிற்கூறிய குணங்கள் பெரும்பாலாரால் எண்பிக்கப்பட்டன. அகந்தை இதை 10,014 பேர் குறித்தனர். சோம்பலும், எல்லாந் தெரியுமென்கிற அகம்பாவமும் இவைகளைக் குறித்தவர் 7,000. அமிதஜீவியம், சூது, குடி, வரம்பற்ற விளையாட்டு இவைகளைக் குறித்தவர் 6,000. மதிக்கேடு கடையாகப் பலரால் குறிக்கப்பட்டன.

**அமேரிக்க ஆராதூரீத்தனம்.**—அமெரிக்க ஐஸ்வரியவான்களின் ஆராதூரித்தனம் அளவுகடந்து போகிறதென்பதற்குப் பிற்கூறிய திருஷ்டாந்தமே சாலும். காலிபோர்னியாவின்கண்ணுள்ள மிஸிஸ் கிளாரா பால்ட்வின் என்னுஞ் சீமாட்டி தரிக்கிற கவுன் என்கிற உடையின் விலை 72 ஆயிரம் பவுண். பாதரக்ஷை வயிர மிழைத்தது. அவளுடைய தலைக்கிரீடமும் மேற்போர்வையாகிய உடையுமாத்திரம் 80 ஆயிரம் பவுண், அதாவது 12 லக்ஷம் ரூபாயென்றால் இத்தகைய வீணாடம்பரத்திலும் மிஞ்சினதுண்டோவென் றெவரும் யூகித்துக் கொள்ளலாம்.

**குஷ்டரோகிகள் சம்ஹாரம்.**—சீனாவில் குவாங்ஸி என்னுமிடத்தில் நடந்த குஷ்டரோகிகள் சம்ஹாரமென்கிற ஒரு பரிதாப செய்தி வந்திருக்கிறது. குஷ்டரோகிகள் வசித்த ஒரு கிராமத்தைச் சுமார் நூறு இராணுவ வீரர் முற்றுகைபோட்டு ஆண்

பெண் பிள்ளைகளென்கிற வித்தியாசமின்றி யவர்களையெல்லாம் தங்கள் துப்பாக்கி யீட்டியாற் குத்தித் தள்ளி, ஒரு பெரிய குழியிற் போட்டுக் குவித்துக் கெரிசன் எண்ணெயை யூற்றித் துப்பாக்கி வெடிசுட்டுத் தீக்கொளுத்தி அவ்வளவுபேரையும் நீற்றிவிட்டார்களாம். மெய்நடுங்கும்படியான இக்கொடுங் கிருத்தியத்தைச் செய்த நோக்க மின்னதென விளங்கவில்லை.

**ஐரோப்பிய துருக்கி யுத்தம்.** — கக்ஷிப் பிரதிகக்ஷிக்காரர் சண்டையை நிறுத்திச் சமாதானத்துக்குரிய ஒழுங்குகளைக்குறித்துப் பேசிவருகிறார்கள். துருக்கி, ஐரோப்பா, துருக்கியில் கான்ஸ்தாந்திநோபிலாகிய தலைநகரையும், அதையடுத்து வெகு சொற்பமான பூமியையுந் தவிர மற்ற இடங்களையெல்லாம் இழந்துவிட்டது. பிடித்த இடங்களை அந்தந்த நாட்டார் அப்படியப்படியே தங்களுடைய தாக்கிக்கொண்டார்கள். இந்தவிஷயத்தில் மாண்டிநிகிரோவுக்கு ஆஸ்டிரியாவும் அதன் சொல்லைக் கேட்டு ஐரோப்பிய பெரிய அரசுகளும் செய்தது அநியாயமென்றே சொல்லவேண்டும். மாசிடோனியாவைக் கிரீஸும், தெரேசை பல்கேரியாவும் கைப்பற்றிக்கொள்ள, மாண்டி நிகிரோ பிடித்த ஸ்கூடாரியை அது விடவேண்டுமென்று ஆஸ்டிரியா நிர்ப்பந்திக்க, மாண்டி நிகிரோ மிகுந்த வியாகுலத்தோடு அதை விட்டுவிட்டது. மாண்டி நிகிரோவுக்கும், செர்வியாவுக்கும் மற்றப் பாகங்களில் சில இடங்கள் கிடைக்கும். அல்பானியாவில் சுய இராஜாங்க ஏற்பாடு நடக்கிறது. இதற்கிடையில் அல்பானியாவின் மேலதிகாரம் துருக்கிக் கிருக்க வேண்டுமென்று துருக்கி பிரயத்தனப்படுகிறது. இதற்குச் சண்டைசெய்த 4 இராஜாங்கத்தாரும் விரோதமாயிருக்கிறார்கள். யுத்த நஷ்டமாக துருக்கி 60 லக்ஷம் பவுண் செலுத்தவேண்டுமென்று 4 இராஜாங்கத்தாருங் கேட்டிருக்கிறார்கள்.




கிலெனியாதேசத்து எரிமலை.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

மேலிந்தியாவில் சமணர் இருக்கும் இடங்களிலெல்லாம் மிருகங்களை வைத்துப் போஷிக்கிற தரும வைத்தியசாலை பட்டணத்திற் கொன்றுண்டு. அதைக் கவனிக்குங்கால் ஜைனர் ஜீவபிராணிகளை எவ்வளவு பயபக்தியுடன் மதிக்கின்றனர் என்பது எவர்க்கும் எளிதில் புலப்படும். கூச் மாகாணத்திலுள்ள தருமசாலை யொன்றில் ஐயாயிரம் எலிகள் இவ்வாறு பராமரிக்கப்பட்டுவந்தன. புத்த சமயிகளைப்போல் சமணரும் சதுர்வேத ஆதாரத்தை மறுப்பரெனினும், "நிர்வாண" என்னும் கொள்கையை ஏற்றுக்கொள்ளார். ஆன்மா பிறவியினின்று மீட்படைந்தபின், மகாத்மாக்கள் வாசஞ் செய்யப்பெற்ற ஏதோ பதவி ஒன்றில் வைதீக ஜீவனம்செய்ய ஆரம்பிக்கின்றனவெனக் கூறுவர்.

சமணர் அநேகர் பம்பாய் ராஜதானியிலும் அதைச்சார்ந்த சிற்றரசு நாடுகளிலும் வசிக்கின்றனர். பெரும்பான்மையோர் வியாபாரிகளாயும் உண்டியல்காரராயுமிருப்பதால் இம்மதானுசாரிகள் தனவான்களென்றும் புத்திக்கூர்மையுள்ளவர்களென்றும் சில விஷயங்களில் முன்னுக்கு வந்திருக்கிறவர்களென்றுமே சொல்லவேண்டும். சமணரில் அநேகர் தங்களை இந்துக்களென்று பாராட்டிவருவதால், 1901–ஆம் ஜனசங்கை மதிப்பில் அவர்களுடைய ஜனத்தொகையில் நூற்றுக் கைந்துவீதம் குறைவு காணப்பட்டது. 1911–ன் கணக்குப்படி மறுபடியும் நூற்றுக்கு ஆறுவீதம் இவர்கள் குறைந்திருக்கிறார்கள்.

4. **சீக்கியமதம்.**—சீக்கியர் மதத்தை ஸ்தாபித்ததாகப் பெயர்பெற்றுவரும் நானுக் என்பவன் லாகூர் பட்டணத்திற்கருகில் 1469–ம் வருஷத்தில் பிறந்தான். சீக்கிய சமயமெனின், இந்து மார்க்கத்துக்கும் மகம்மதிய மார்க்கத்துக்கும் பொதுவாயுள்ள உண்மைகள் ஒருங்கு திரட்டப்பட்ட ஓர் மதமாம். ஆதியில் இந்து சமயத்திலுள்ள ஜாதிபேதத்திற்கும் விக்கிராகாராதனைக்கும் விரோதமாக இச்சமயம் ஏற்படுத்தப்பட்டது. சீக்கியர் ஒரே தேவனை வழிபடுவர். பல தேவர்களைப் பூசிப்பது தவறு என்பது அவரது கோட்பாடு. சீக்கியர் சமயம் விக்கிரகாராதனை, ஸ்தலயாத்திரை, சகுனம் பார்த்தல், மந்திரித்தல் முதலியன தப்பிதம் என்று அவற்றைக் கண்டனம் செய்கின்றது. ஜாதிபேதமுண்டென்றுவது, பிராமணர் மற்றவரைவிட மேலானோர் என்றுவது, பிறப்பு இறப்புகளில் செய்ய வேண்டிய சடங்காசாரங்களை அனுசரியாததால் தீட்டு உண்டென்றுவது சீக்கியர் சமயத்தில் ஏற்படவில்லை. நானுக்கின் தொண்டருக்கு சீக்கியர் என்று பெயர். சீக்கியர் என்னும் பதத்திற்கு சிஷர் என்றர்த்தமாம். தம் குருக்களின்மீது பாராட்டிய வைராக்கியமே சீக்க சமயிகள் நடத்தையில் விசேஷ லட்சணம். 1538–ம் ஆண்டில் பாபா நானுக் தேகவியோகமானான். அவனும் அவன்பின் தோன்றிய ஒன்பதுபேரும் பத்து முக்கிய குருக்களாக எண்ணப்படுகின்றனர். ராமதாஸ் என்னும் நாலாம் குரு "அமிர்த்சர்" அல்லது "அமிர்த தடாகம்" என்றழைக்கப்படும் சதுரமான பெரிய தடாகமொன்றை வாங்கி, அதன் நடுவில் பின் கீர்த்தி பெற்று விளங்கிய பொற்கோவில் ஒன்றைச் சமர்ப்பித்தான். இதுவே சீக்கியருக்கு சிரேஷ்ட கோவில். அவனது புத்திரனும் ஐந்தாவது குருவுமாகிய அர்ஜன், முதற்குரு நானுக்கும் இன்னும் மற்ற மூன்று குருக்களும் அருளிச்செய்த பாடல்களை

சங்கிரகமாகத் திரட்டி, **ஆதிகிரந்தம்** அல்லது முதல் நூல் என அதற்கு நாமகரணம் சூட்டி, அதை மேற்கூறிய பொற்கோவிலில் வைத்திருந்தான். இதே சீக்கிய சமய நூல்களிலெல்லாம் சிறப்புற்றதாக வழங்கிவருகிறது. அக்கால முதல் குருபாத்தியதை தலைமுறை தத்துவமாயிற்று. பின்தோன்றிய ஐந்து குருக்களும் ஆசிரியர்போல் நடவாமல், அதிகாரிகள்போல் நடந்ததால், மொகலாய சக்கரவர்த்தி அவர்களுடைய கர்வத்தை யடக்க நேரிட்டது. ஔரங்கசீப் சக்கரவர்த்தி பிறப்பித்த கட்டளையால் ஒன்பதாவது குரு கொல்லப்பட்டதுமன்றி, மற்ற சீக்கியரும் மதத்துவேஷ காரணமாய் துன்புறுத்தப்பட்டனர். இவ்விசேஷம் சீக்கியாது பின் சரித்திரத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. எப்படியெனில் பத்தாவது குருவாகிய குருகோவிந்தன் சீக்கியரெல்லாரையும் யுத்தத்தில் பழக்குவித்து, மகம்மதியரானாலும் சரி, இந்துக்களானாலும் சரி எவரையும் நாம் பகைப்போம் என்னும் பிரதிக்கினையையும் பண்ணச்செய்தான். சிங்கமென்றர்த்தங்கொள்ளும் 'சிங்' பட்டத்தைத் தங்கள் தங்கள் பெயருடன் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், நீண்ட ஜடையாக ரோமம் வளர்க்கவேண்டுமென்றும், தலைச்சவரமாவது, முகச்சவரமாவது செய்யக் கூடாதென்றும், தொப்பி ஒருபொழுதும் தரிக்கக்கூடாதென்றும், போஜனமருந்தும் சமயத்திலுங்கூட எடுக்காமல், எப்பொழுதும் தலைப்பாகையே தரித்துக்கொள்ளவேண்டுமென்றும், மகம்மதியருடன் ஓயா யுத்தம்புரிவதற்கு அறிகுறியாக எப்பொழுதும் வாள் கையில் வைத்திருக்கவேண்டுமென்றும், புகையிலை பரிச்சேதம் பிரயோகிக்கக் கூடாதென்றும் ஆஞ்ஞாபித்தான். (இன்னும் வரும்.)

## SCIENCE IN HINDUISM.

ஹிந்துமார்க்கத்தில் கற்பிக்கப்படுகிற

### சாஸ்திரப் பிரமாணங்கள்

அல்லது

### கல்விக்குறிப்புகளைக் குறித்தது.

(தொடர்ச்சி.)

3. மழை சந்திரனிடத்திலிருந்து வருகிறதென்றும், சந்திரனிடத்திற்குத் திரும்புகிறதென்றும், இராகு, கேது என்று இரண்டு சர்ப்பங்கள் சூரியனையும், சந்திரனையும் விழுங்குகிறதினாலே கிரகணமுண்டாகிறதென்றும், சூரியன் அக்கினியிலிருந்து உண்டானதென்றும், அக்கினி வாயுவிலிருந்து உண்டானதென்றும், மின் மழையிலிருந்து உண்டாகியதென்றும் உபநிடதங்களில் சாதிக்கப்படுகிறது. இவைகளெல்லாம் தப்பிதமான எண்ணமென்று நாம் ரூபகாரப்படுத்த வேண்டியதுண்டா? இக்காலத்தில் கல்விகளைப் பயிற்சிசெய்கிற எந்த மாணக்கரும் இதெல்லாம் தெரியாமையாய் எழுதிப் போட்டார்களென்று நிச்சயமாய்ச் சொல்லுவார்களே.

4. ரசாயனத்தைக்குறித்து விசாரித்தாலும் அப்படியே அநேகவிதமான தப்பித சாதனங்களைக் காண்போம். ஹிந்துக்கள் இவ்விஷயத்தைப்பற்றி உபநிடதங்களில் காட்டிய முறைப்படி சகலவித சடப்பொருள்களுக்கு ஆதாரமாக ஐந்து பூதங்களுண்டாம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பனவாம். இதில் ஐந்தாவது சொல்லப்பட்ட ஆகாயமென்பது சமஸ்த பொருட்களுக்கும் இடங்கொடுக்கிற சுத்தவெளியாம். அப்படிபபட்டது மெய்யாகவே இருக்கப்பட்ட சடப்பொருள் என்பதற்கு ஒரு திருஷ்டாந்தமுமில்லை. இப்படியிருக்க, அதை ஐந்து பூதங்களில் ஒன்றாக வைக்கிறார்கள். மற்ற நான்கைக்குறித்து விசாரித்தால், அதது ஏகப் பகாப் பொருளாயிராமல், பகுபொருளாகவே இருக்கிறது. இதனுடைய சேர்க்கையை அறிவதால், ஜலத்தையும் பிரிக்கலாம், காற்றையும் பிரிக்கலாம், இவையே மூலப்பூதங்களாயிருக்குமாயின் அப்படிப் பிரிக்கக்கூடாதே.

5. உடற்கூறு சாஸ்திரத்தைப்பற்றி, கட உபநிடதத்தில் சொல்லிய ஒரு விநோதத்தைக் கவனிக்கவேண்டும், அந்தப் பிரமாணத்தை யாமா என்பவர் நச்சிகேத்தருக்குச் சொல்லுகிறார். என்னவெனில், "இரத்தப்பையிலிருந்து நூற்றொரு நாடிகள் புறப்படுவதில், அவைகளில் பிரதானமானது மூளைக்குள் செல்லுகிறது" என்கிறார். மனிதருடைய தேகங்களை நாடோறும் ஆராய்ந்து பரிசோதித்திருக்கிற பண்டிதர் யாவரும் மேற்சொல்லியது சுத்தப் பொய்யென்றும், இரத்தப்பையிலிருந்து புறப்படுகிற நாடிகள் எழுமாத்திரமென்றும், அவைகளில் இரண்டு நாடிகள் சிரசில் சென்று மூளைக்குள் நடுவாகச் செல்லாமல், கபாலத்தின் பக்கமாகவே சாய்ந்து செல்லுகிறதேயல்லாது, ஆத்துமா தேகத்தை விட்டுப் பிரியும்படியாக, இரத்தப்பையிலிருந்து ஏகுழலாய் மூளைக்கு நடுவாகத் தலையுச்சிக்கு நேராய்ச் செல்லுகிறதே இல்லையென்றும், சந்தேகத்துக் கிடமில்லாமல் ஒப்புவிப்பார்கள். யாமா என்பவரும் இரத்தப்பையிலிருந்து சிரசுக்குச் செல்லுகிற நாடிகள் இத்தனை என்று தெரியாவிட்டால் ஆத்துமத்தைக்குறித்து அவர் சொல்லிய விஷயங்களை நாம் நம்புவதெப்படி? ஹிந்து சாஸ்திரங்களில் சொல்லிய சொப்பனங்களைக் குறித்தும் தசவாயுகளைக்குறித்தும், கண் சிமிட்டுகிறதைக்குறித்தும், ஆத்துமாவினுடைய மூன்று சரீரங்களைக்குறித்தும், இவைபோல்வன மற்றும் அநேகவகையான விஷயங்களைக்குறித்தும், விவரித்துச் சொல்லலாம். ஆனாலும் சொன்னதே போதும், சொன்ன குறிப்புகளை எவ்வளவேனும் யோசித்துக்கொள்ளுகிறவன், ஹிந்து சாஸ்திரங்களை மெச்சிக்கொள்ள வகை காணமாட்டான். இந்த சாஸ்திரங்கள் உலகக்கல்வியால் அறியத்தக்க விஷயங்களை இவ்வளவு தப்பிதமாய்க் காட்டியிருக்குமென்றால் அதரிசன விஷயகங்ளாகிய கடவுளைக்குறித்தும், ஆத்துமத்தைக்குறித்தும், மறுமையைக்குறித்தும்சொல்லியவைகள்மெய்யென்று எப்படி நம்பலாம்? நம்புகிறதற்கு இடமே இல்லை.

(இன்னும் வரும்.)

## DEPRESSED CLASSES ELEVATION SOCIETY OF SOUTH INDIA.

### தென்னிந்தியா ஒடுக்கப்பட்டவர்கள் சங்கம்.

நான்காம் மஹா ஜனக்கூட்டம்.

ஜுன்மீ 11, 12உ புதன், வியாழம்.

வைகாசிமீ 29, 30உகளில் தஞ்சாவூர் ஜில்லாவில் தென்னிந்தியா ஒடுக்கப்பட்டவர்கள் சங்கத்தின் மஹா ஜனக்கூட்டம் நடத்தப்படும்.

பொதுக்கூட்டத்தில் தீர்மானமாகவேண்டிய விஷயங்கள்: — (1) குடியிருப்புப் பாத்தியம், (2) ஐம்பது வருஷமாகக் கிடைக்கும் ஒரேவிதக் கூலி, (3) கி. மு. செய்யும் தண்டனை, (4) படிப்பு, (5) கிராமங்களில் பிள்ளைகளின் ஆஜர் சங்கியை, (6) தேசாதிசெட்டி செய்யும் அநியாயம், (7) ஆதரிப்புப் பாடசாலை.

பயிர்வேலை, வண்டி, சேவகம், சமையல், பாதரக்ஷை முதலிய தொழில் செய்யும் ஒடுக்கப்பட்டவர்கள், ஜாதி, மதபேதமின்றி, மஹா ஜனக்கூட்டத்துக்கு வரலாம்.

இடம் இன்னதென்று காரியதரிசிகளுக்கு எழுதவேண்டியது.

கனதனவான்களும் மேற்படி கூட்டங்களுக்கு வந்து உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொதுக்கூட்டங்கள் செலவுக்குத் தங்களால் கூடிய பணச்சகாயம்: **சென்னை, வில்லிவாக்கம், ம-ா-ா-ஸ்ரீ, மா. வேதமுத்து அவர்களுக்கு அனுப்பவேண்டியது.**

**மஹா ஜனக்கூட்டம் நடத்தப்படப்போகும் இடம் இன்னதேன்று அறியவும்.** மற்ற விஷயங்களுக்கும் அடியிற்கண்ட காரியதரிசிகளுக்கு எழுதிக்கொள்ளலாம்.

நாகபட்டணம், வெளிப்பாளையம் A. சிவராமசாமி.
சிதம்பரம்..........................பா. சாலொமோன்.
சீர்காழி, மணிக்கிராமம், இரங்கசாமி பண்டாரம்.
திருவள்ளூர்......பாண்டூர்......V. D. ஸ்தேவான்.
அரக்கோணம்......திருவேலங்காடு......V. தாவீது.

11-5-13.
சீர்காழி, மாதர்வேளூர்.
தஞ்சாவூர் ஜில்லா.

V. P. ஆனந்தன்,
பிரயாண காரியதரிசி.

## THE CHARACTER OF JESUS.

### இயேசுரட்சகரின் திவ்ய குணசீலங்கள்.

இராகம், ஐம்பை. திரிபுடைதாளம்.

பல்லவி.

எசு ராஜா நல்லவரே—அவர்
கேட்பதெல் லாம்தர வல்லவரே.

அனுபல்லவி.

மாசணுகாத க்ருபாகரரே—அதி
மகிமைவிளங்கும் நிறைவாகரரே—எசுராஜா

சரணங்கள்.

1. பொன்னக ராளுநற் பூபதியே—அவர்
பூதலத் தோர்க்குயர் அதிபதியே
மன்னுயிர்க் கானநல் குணபதியே—தினம்
மாதவர் தொழுதிடுஞ் ஸ்ரீபதியே— எசுராஜா

2. விண்புவி யாவையும் படைத்தவரே—அவர்
வலுசர்ப்ப மதின்தலை யுடைத்தவரே
பின்னு மலகைவாயை அடைத்தவரே—அதி
பிரபல அரணைக் கிடைத்தவரே— எசுராஜா

3. பாவிகட் காய்பரம் விட்டவரே—அவர்
பாரினில் பாடுகள் பட்டவரே
மேவி தமைபலி யிட்டவரே—அதி
மேன்மை ஜெயக்கொடி நட்டவரே—எசுராஜா

4. பாவிதம் மிடம்வரச் சொன்னவரே— அவர்
பாரி லுள்ளவர்க்கு மன்னவரே
தாவி யடைந்தவர்க்கு விண்ணவரே—பெருந்
தாபர மானகன் மலையவரே— எசுராஜா

5. பாவ பாரமதை யொழிப்பவரே—அவர்
பாவிகளைக் கண்டு களிப்பவரே
ஆவலுடன் மன்னிப் பளிப்பவரே—அதி
அகமகிழ் வானநல் செழிப்பவரே— எசுராஜா

6. ஆதரவற் றவர்க்கனு கூலனே—அவர்
ஆறுதலளித் திடும்மனு வேலனே
பூதலமீ துற்றமரி பாலனே—அதி
புகழ்மிகும் புண்ணியகுண சீலனே—எசுராஜா

7. துன்பங்கள் யாவையும் தீர்ப்பவரே—அவர்
துணைபுரிந்தே தினங் காப்பவரே
பொன்னுலகி லெமைச் சேர்ப்பவரே—மிக
பூரண பலன்தரப் பார்ப்பவரே— எசுராஜா

தஞ்சை, J. பொன்னுசாமி,
சுவிசேஷப் பிரசங்கி.

## KAMBAN THE POET.

## கம்பநாடர்.

(தொடர்ச்சி.)

ஸீதையின் கற்பின் திறம் பலவிடங்களில் பல விதமாக உரைத்திருக்கின்றது. ஸீதை தீக்குளித்து மீண்டவளவில் அக்னிதேவன் இராமனை நோக்கி,

அங்கியான் என்னை இவ் வன்னை கற்பெனும்
பொங்குவெந் தீச்சுடப் பொறுக்கி லாமையால்
இங்கணந் தேன்உறு மியற்கை நோக்கியும்
சங்கியா நிற்றியோ எவர்க்கும் சான்றுளோய்

என்றானாகக் கூறியிருப்ப தொன்று. திருவடி தொழுத படலத்தில் ஸீதையின் கற்பை விளக்கிய பல செய்யுள்களில்

விற்பெருந் தடந்தோள்வீர வீங்குநீ ரிலங்கை வெற்பின், நற்பெருந் தவத்தாளாய நங்கையைக் கண்டேனல்லேன்:, இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும், கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்

என்றது நனிநயம் பயப்ப தொன்றே. இராமதூதனை அரக்கனோ எவனோ என்றையுற்ற ஸீதை, இரக்கமே யாகவந்திங் கெம்பிரா னமஞ் சொல்லி, [டோ உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிரிதின் உதவியுண் என்றதும் ஒன்றே. ஸீதை சிறையிருந்ததை அநுமான் கண்டதான காட்சிப்படலத்தில் மூன்று முதல் இருபத்தொன்பதுவரையில் இருபத்தேழு செய்யுள்களும் ஸீதையின் இருப்பை விளக்குவன. அவற்றில் பல கூறுகள் அவள் கற்பின் திண்மையை விளக்குவனவே. அவற்றுள் கற்பின் பாவிகத்தை, நடு நாயகமாக நின்ற

அருந்து மெல்லட காரிட அருந்துமென் றழுங்கும்; விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும், மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்; இருந்த மாநிலம் செல்லரித் திடவுமாண் டெழாதாள்

என்ற செய்யுள் நன்கு விளக்குகின்றது. இச்செய்யுளின் ஈற்றடி நாயகமணியின் ஒளியேபோலும்.

இராமனுடைய தம்பியரில் இலக்குவன் இராமனிடத்தில் பாராட்டிய அன்பின் விசேஷம், ஸுமித்ரை இலக்குவனை நோக்கி

ஆகாத தன்றால் உனக்கவ்வனம் இவ்வயோத்தி
மாகாத லிராமன் நம்மன்னவன் வையமீந்தும்
போகாத உயிர்த்தாயர் நம்பூங்குழல் சீதைஎன்றே
ஏகாய்இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்.

மகனே! இவன்பின் செல்தம்பி
என்னும் படியன் றடியாரின் ஏவல் செய்தி:
மன்னும் நகர்க்கே இவன்வந் திடின்வா அதன்றேல்
முன்னம் முடி

என்று கற்பித்த முன்னரே விளங்கிற்று. இராமனுக்கு நீர்வேட்கை தணிக்கத் தண்ணீர் கொணரச் சென்ற இலக்குவன் அயோமுகியால் சிறிதுநேரம் வரவியலாமல் காலந் தாழ்த்தபோது, இருட்டிலே தம்பியை நினைந்து புலம்புகின்ற இராமன்

என்னைத் தரும்எந் தையைஎன் னையரைப்
பொன்னைப் பொருகின் றபொலன் குழையாள்
தன்னைப் பிரிவேன் உளன்ஆ வதுதான்
உன்னைப் பிரியா தஉயிர்ப் பலவோ?

என்றானாகக் கூறியிருப்பது இலக்குவனிடத்தில் இராமனுக்குள்ள அன்பை விளக்குகின்றது.

கிட்கிந்தையில் ஸீதையின் அணிகல முடிப்பை அவிழ்த்துக் காட்டியபோது, இராமன் ஏனை அணிகலங்களை ஸீதைக் குரியவை என அடையாளக் குறிப்பறிந்து பாதசிலம்புகளை ஐயமுற்றவிடத்து, இலக்குவன் பாதசிலம்புகள் ஸீதைக்கே உரியனவென்று உறுதிகூறி ஏனையவற்றை அறியகில்லானாக இருந்தனன் என வருவது இலக்குவனுடைய நிறையை நன்குணர்த்தும். இலக்குவனுடைய உத்தமோத்தம குணம் புலப்படுவது ஓரிடத்தில். இலங்கையின் மேலைக்கோட்டை வாயிலில் இராவணன் வந்து இலக்குவனோடு போர்புரிந்து தோல்வியுறுவானாக, தனது தோல்விக்கு விபீஷணன் காரணமாதல் அறிந்து விபீஷணன்மீது ஒரு சக்தியை ப்ரயோகித்தான். அப்போது,

தோற்ப னென்னினும் புகழ்நிற்கும்: தருமமும் தொடரும்:, ஆர்ப்பர் நல்லவர். அடைக்கலம் புகுந்தவன் அழியப், பார்ப்ப தென்?நெடும் பழிவந்து தொடர்வதன் முன்னம், ஏற்பன் என்தனி மார்பினென் றிலக்குவன் எதிர்ந்தான்.

அதுகண்டு அதைத் தம்மார்பில் ஏற்றுக்கொள்ளுமாறு விபீஷணனும் அங்கதனும் சுக்ரீவனும் அநுமனும் ஒருவர்முன் ஒருவராக விரைந்து செல்லலுற்றனர். இவ்வனைவரையும் விலக்கி இலக்குவன் முந்துறச் சென்று அந்த சக்தியைத் தன் மார்பில் ஏற்றுக்கொண்டான்.

தசரதகுமாரர் நால்வருடைய குணவிசேஷமும்,

கானாள நிலமகளைக் கைவிட்டுப் போவானைக் காத்துப் பின்பு, போனானும் ஒருதம்பி. போனவர்கள் வருமவதி போயிற் றென்னா, ஆனாத உயிர்விடஎன் றமைவானும் ஒருதம்பி. அயலே நானாது, யானுமிவ் அரசாள்வன். என்னேஇவ் வரசாட்சி இனிதே யம்மா.

மன்னிற்பின் வளநகரம் புக்கிருந்து வாழ்தானே பரதன் என்னும், சொன்னிற்கும் என்றஞ்சிப் புறத்திருந்தும் அருந்தவமே தொடங்கினாயே, என்னிற்பின் உளனிவனா மென்றேபின் அடிமையுனக் கிருந்ததேனும், உன்னிற்பின் இருந்ததுவும் ஒருகுடைக்கீழ் இருப்பதுவும் ஒக்குமென்றான்

என்ற சத்ருக்நன் கூற்றால் விளங்கும். இவன் குணம் விளங்கும் இடம் வேறில்லை. பரதனை மெச்சாதவரும் மெச்சினர். இராமனை ஏசலுற்ற வாலி

வாய்மையு மரபுங்காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனேநீ பரதன்முன் தோன்றி னாயே

என்றான். ஸேனையை அக்கரையில் கண்டு கறுவுதலுற்ற குகன் பரதனுடைய விரத வேடத்தைக் கண்டபோது,

ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியின் அம்மா

என்று புகழ்ந்தான். கைகேசியிடமிருந்து கோசலையிடஞ் சென்று வருந்திய பரதனுடைய கருத்தை யறிந்த கோசலை

முன்னை நுங்குல முதல்உ ளோர்கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?

என்றாள்: பதினான்கு வருடமுங் கழிதலுற்ற அளவில் இராமன் வந்திலனென்று தீப்பாயப் புகுதலைக் கண்டு,

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கரு காவரோ?
புண்ணி யம்எனும் நின்உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?

என்று கூறினாள். சுக்ரீவன் வாலியைப் போர்க்கழைத்தது கண்ட இலக்குவன் அது அந்யாயமென்று இராமனிடம் முறையிட, இராமன்:

பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேச லாமோ?
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கள் எல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தமன் ஆவ துண்டோ?

என்றான். இங்ஙனம் இக்குமாரரிடம் விளங்குங் குணவிசேடத்தைக் காட்டினும் உலகில் ஸஹோதரர்களுக்கு ஏற்றமான பாவிகம் வேறென்ன வேண்டும்?

(இன்னும் வரும்.) T. C. M.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager,
Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னப்பட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| எக்காலக் கண்ணி ... ... ... ... ... | 0 | ½ |
| எபேசியர் வியாக்கியானம் 2-ம் பதிப்பு ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர்) ... ... ... ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

### ஜூன்மீ பஞ்சாங்கம்.—

| வாரம். | ஜூன்மீ = வைகாசி—ஆனி. ⊙ பௌர்ணமி, 18உ ● அமாவாசை, 4உ | | | | | வைகாசி—ஆனி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 2 | 9 | 16 |
| திங்க ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 3 | 10 | 17 |
| செவ் ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 4 | 11 | ... |
| புதன்... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 5 | 12 | ... |
| வியா ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 6 | 13 | ... |
| வெள்... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 31 | 7 | 14 | ... |
| சனி ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 1 | 8 | 15 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913